TAMIL

sam singaporeartmuseum
CONTEMPORARY ART IN SOUTHEAST ASIA

# HO TZU NYEN Time & the Tiger

REFLECTIONS ON ASIA BY CRITICALLY ACCLAIMED SINGAPOREAN ARTIST HO TZU NYEN

24 NOV 2023 — 3 MAR 2024
TANJONG PAGAR DISSTRIPARK

2003ஆம் ஆண்டு முதல் ஹோ ட்ஸூ நியென் (Ho Tzu Nyen) உருவாக்கிய செல்வாக்குமிக்க படைப்புகளைக் காண்பிக்கும் 'காலமும் புலியும்' என்ற ஒரு நடு-தொழில்வாழ்வுக் கருத்தாய்வுக்கு உங்களை வரவேற்கிறோம்.

நீங்கள் இரு காட்சிக்கூடங்களினூடாகச் சுற்றி வரும்போது, ட்ஸூவின் படைப்பின் மையக்கருத்தை வரையறுக்கும் கருப்பொருள் இழைகளில் சிக்கிக் கொள்வீர்கள். சான்றாகப், புலி ஒரு தொடர்ந்து இடம்பெறும் உருவம் என்பதைக் காட்டிலும் அதிகமான முக்கியத்துவம் கொண்டது- அஃது அவரது கலைப் பயணத்தில் அவருடன் எப்போதுமிருக்கும் தோழன்.

ஒவ்வொரு படைப்பின் நுழைவாயிலிலும், உங்கள் புரிதலை மேம்படுத்துவதற்காக வைக்கப்பட்டுள்ள, ட்ஸூ மற்றும் ஓவியக்காப்பாளர்களுடனான எனது உரையாடல்களை அடிப்படையாகக் கொண்ட சிறுகுறிப்புகளைக் காணலாம். இங்கே, ட்ஸூவின் கற்பனையைக் கவர்ந்த கதைப்பாத்திரங்களின் கவர்ச்சிகரமான கதைகளை நீங்கள் காண்பீர்கள். எண்ணற்ற பெயர்களால் அறியப்பட்ட, காலனித்துவத்திற்கு முந்தைய சிங்கப்பூரின் நிறுவனர் சேங் நிலா உட்டமா முதல்; பல வெளிநாட்டு இரகசியச் சேவைகளுக்கு இரகசியமாகப் பணிபுரிந்துகொண்டே மலேயக் கம்யூனிஸ்ட் கட்சியை வழிநடத்திய, 30க்கும் மேற்பட்ட மாற்றுப்பெயர்களைக் கொண்ட லாய் டெக் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் சிஐஏ ஈடுபாடு பற்றிய கிசுகிசுக்களைக் கிளப்பிய ஜீன் இசட். ஹன்ரஹான் (Gene Z. Hanrahan) வரை பலர் அதில் அடங்குவர். இந்தப் புதிரான உருவங்கள் ஒவ்வொன்றும், அவை ஊக்குவிக்கும் படைப்புகளைப் போலவே, ஹோ ட்ஸூ நியனின் உலகான எப்போதும்-மாறிக்கொண்டிருக்கும் புதிருக்கு ஒரு பகுதியைப் பங்களிக்கின்றன.

இந்தக் கண்காட்சியைப் பார்க்கும்போது, நான் ஒரு முரண்பாடான உணர்தலுக்கு வந்தேன்: கடந்த இருபது ஆண்டுகளில் ட்ஸூவின் கலை கணிசமாக வளர்ச்சியடைந்துள்ளது, இருப்பினும் அது வியக்கத்தக்க வகையில் நிலையானதாக உள்ளது. "நேரம் என்பது அம்பு போல முன்னோக்கிச் செல்லும் ஒரு வழிப் பாதை அன்று, இது பருவங்கள், காலக்கட்டங்கள் மற்றும் விரைவான கணங்கள் ஊடாக பின்புறமாக வட்டமிட்டு, வளைந்து சுழலக்கூடியது", என்று ட்ஸூ ஒருமுறை என்னிடம் சொன்னது எனக்கு நினைவிருக்கிறது, சில நேரங்களில் அஃது அதன் தோற்றிடத்திற்குத் திரும்புகிறது, மற்ற நேரங்களில், அது முற்றிலும் புதிய வழியை அடைகிறது. இந்தப் பிரமை போன்ற இடத்தில் நீங்கள் நடக்கும்போது, ட்ஸீவின் வார்த்தைகளை உங்களுடன் எடுத்துச் செல்ல உங்களை அழைக்கிறேன்.

## கண்டுலவல் பற்றிய குறிப்பு:

நீங்கள் தற்போது காட்சிக்கூடம் 1-இல் உள்ளீர்கள், காட்சிக்கூடம் 2-இல் கூடவழி முழுவதும், தென்கிழக்கு ஆசியாவில் உள்ள புலிகளின் வரலாறுகளை ஆழமாக ஆராயும் ‘ஒரு புலி அல்லது பல புலிகள்’ என்ற படைப்பைக் காணலாம்.

உங்களிடம் ஏதேனும் கேள்விகள் இருந்தால், அன்புகூர்ந்து எங்கள் நட்புறவுமிகு ஊழியர்களை அணுகத் தயங்க வேண்டாம். இங்கு அவர்கள் உங்களுக்காக உதவ இருக்கிறார்கள்.

**1**
**ஹோட்டல் அபோரியா**

**2**
**CDOSEA**

**3**
**எஃப் எனில் மடிக்கவும (F for Fold)**

**4**
**அறியாத மேகம்**

**5**
**டி என்றால் நேரம்**

**6**
**டி என்றால் நேரம்: நேரத் துண்டுகள்**

**7**
**ஹோ ட்ஸு நியென்**

**8**
**ஒன்று அல்லது பல புலிகள்**



## 1 ஹோட்டல் அபோரியா

2019
காணொளி, தானியங்கி மின்விசிறி, பண்புப்பெயர்ப்பிகள், காட்சிக் கட்டுப்பாட்டமைப்பு
காணொளி: ஆறு-வழி படமெறிதல், 4:3, நிறம் மற்றும் 24-வழி ஒலி, 84 நிமிடம் 1 நொடி
அலைகள்: 12 நிமிடம்; காற்று: 24 நிமிடம்; குழந்தைகள்: 24 நிமிடம்; வெற்றிடம் 24 நிமிடம் 1 நொடி

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

2011 இல், ட்ஸூ 'அறியாத மேகம்' என்ற இந்த நிறுவலின் மூலம் வெனிஸ் ஈராண்டுக் கண்காட்சியில் சிங்கப்பூர் சார்பாகப் பங்கேற்றார், அதில், மேகத்தின் எப்போதும் மாறிவரும் மையக்கருத்தை அவர் கலை வரலாற்றின் மூலம் ஆராய்கிறார், எப்படியோ ஒரு பேரண்டத் திருப்பத்தில், வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் (HDB) அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தனிமையில் வாழும் பலதரப்பட்ட கதைப்பாத்திரங்களை இணைக்கிறார்.

இத்தாலிய மறுமலர்ச்சி ஓவியத்தில், மேகம் பொதுவாக வரைதுணியில் நிறப்பூச்சுகளைப் பயன்படுத்துவதன் மூலம் வரையப்படுகிறது, இது பெரும்பாலும் பரவசத்தையும் தெய்வீகத்தையும் குறிக்கிறது. இதற்கு நேர்மாறாக, பாரம்பரியச் சீன இயற்கைக்காட்சி ஓவியம் மேகத்தின் சாரத்தை நிறப்பூச்சு பூசாமல், வரைதுணியின் மேற்பரப்பைத் தொடாமல் விட்டுவிடுவதன் மூலம் வரையப்பட்டு, அதன் உருவிலிப் பண்பை எடுத்துக்காட்டுகிறது. இச்சீன ஓவியர்களில் பலர், "வெறுமை" அல்லது "அசல் வெறுமை" இல்லாத ஒன்று அன்று; மாறாக, அது முழுமையான, உயிர்ப்புடன் கூடிய துடிப்பான வெளி என்ற தாவோயிசக் கருத்தியலால் உந்தப்பட்டவர்கள்.

ட்ஸூவின் ஓவியத்தில் உள்ள வெற்று அல்லது வெற்றுத் திரைகள் நிறைய பேசுவதை நான் எப்போதும் உணர்ந்திருக்கிறேன். அறியா மேகத்தில் மட்டுமன்று, 'ஹோட்டல் அபோரியா'வில் முகங்கள் மறைந்திருக்கும், மற்றும் CDOSEA-வில் (அருகிலுள்ள அறையில் உள்ளது) கூட அதன் பின்னால் ஒளிரும் LED விளக்குகள் காரணமாக அவ்வப்போது திரை வெறுமையாகத் தோன்றும்.

முன்னுரை என்னவென்றால், ஏதோ ஒன்று காணப்படவில்லை என்பதால் அது இல்லை என்று பொருளன்று. ட்ஸூ வழங்கும் ஒவ்வொரு வெற்றுத் திரையிலும், வெற்றிடத்தை நிரப்ப நம் கற்பனையைத் தூண்டி, முடிவில்லா வாய்ப்புகளை அவர் நமக்கு வழங்குவதாக உணர்கிறேன். கணிக்க முடியாத எதிர்காலத்திற்கான நுழைவாயிலாக வெறுமையை நாம் கற்பனை செய்ய முடியுமா?

அறியாத மேகத்திலுள்ள தொடக்கப் படம் ஒரு வெற்றுத் திரையாகும், அதைத் தொடர்ந்து ஒரு கதைப்பாத்திரம் அதனை வெறித்துப் பார்க்கிறது. களியமாக, இந்தக் கதைப்பாத்திரம் பார்வையாளரான உங்களுக்கு ஒரு நிலைப்பாடாக இருக்கலாம்.

ஒரு மேகங்களைத் கட்டடத்தில் அதன் இடிப்புக்கு முன்னதாக அமைக்கப்பட்ட, காலியான பொது வீடுகள் தனிமைப்படுத்தப்பட்ட கதைபாத்திரங்களுக்கு மேடைகளாக செயல்படுகின்றன, அவர்கள் மேகங்களுக்காகப் பெரிதும் புகழ்பெற்ற கலைஞர்களை ஒத்திருக்கின்றனர்: மேகங்களைத் தெய்வீக நெருக்கத்திற்கான வழியாகக் கண்ட இத்தாலிய மறுமலர்ச்சி ஓவியத்தை சேர்ந்த கொரெஜியோ; மேகங்கள் நிறைந்த வானங்களுக்குப் பெயர் பெற்ற அடிமன வெளிப்பாட்டியல் ஓவியர் ரெனே மாக்ரிட், மற்றும் பரந்த அண்டவெளியில் நமது விரைவான இருப்பைக் குறிக்கிற மேகங்களால் மூடப்பட்ட மலைகளுக்காகக் கொண்டாடப்பட்ட சீன மை ஓவியர் மி ஃபூ.

மேகம், எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் அதன் வடிவத்தின் மூலம் இயல்பென்பது எப்போதுமே தோன்றுவது போல் இல்லை என்பதை நுட்பமாக நமக்கு நினைவூட்டுகிறது. இந்த விரைவான உலகில், வெறும் வெறுமை, நிறம் பூசப்படாத மேற்பரப்பின் மறைந்திருக்கும் திறன், நிலப்பரப்பு முழுவதும் மேகங்களின் அமைதியான சறுக்கல் ஆகியவற்றை வேறுபடுத்திப் பார்ப்பது கடினமாகிறது.

அறியாத மேகம், பார்வையாளராகிய உங்களுடன் கனவு போன்ற மூடுபனியில் மூழ்கி முடிகிறது.

## 2 CDOSEA

2017-நடக்கிறது
காணொளி, சிறிய கணிணி, படிமுறைத்தீர்வுப் படத்தொகுப்பமைப்பு, எல்இடி விளக்குகள்
காணொளி: ஒற்றை-வழி படமெறிதல், 16:9, நிறம், 5-வழி ஒலி, முடிவிலாக் கால அளவு

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

அடிப்படையில், ட்ஸூவின் ஆக நீண்ட காலமாகச் செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் படைப்பான, தென்கிழக்கு ஆசியாவின் திறனாய்வு அகராதி (2012-) “தென்கிழக்கு ஆசியாவை ஒரே மதம், மொழி அல்லது அரசியல் அமைப்புடன் ஒருபோதும் பிணைத்திராத, ஓர் ஒருங்கிணைந்த பிராந்தியமாக மாற்றுவது எஃது?” என்ற ஒரு கேள்வியை மையமாகக் கொண்டுள்ளது. இக்கேள்வி சிக்கலானது என்று சொல்வது ஒரு குறைகூற்றாக இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, “தென்கிழக்கு ஆசியா” என்ற சொல் அதன் பலதரப்பட்ட சொந்தச் சமூகங்களில் இருந்து கூட தோன்றவில்லை. மாறாக, இரண்டாம் உலகப் போரின் போது, ஜப்பானியக் கட்டுப்பாட்டில் இருந்து பிராந்தியத்தை விடுவிப்பதையே அதன் நோக்கமாகக் கொண்டிருந்த நேச நாடுகளின் அமைப்பான தென்கிழக்கு ஆசிய ஆணையின் (SEAC) உருவாக்கம் மூலம் இந்தக் கருத்து உருவாக்கப்பட்டது மற்றும் புழக்கப்படுத்தப்பட்டது.

1950 களில் வேகமாக முன்னேறி, “தென்கிழக்கு ஆசியா” என்ற கருத்து, குறிப்பாக அமெரிக்கக் கல்வி வட்டங்களுக்குள் இழுக்கப் பெற்றிருப்பதை நீங்கள் காண்பீர்கள். “தென்கிழக்கு ஆசிய ஆய்வுகள்” தொடர்பில் பல்வேறு துறைகள் பல்கலைக்கழகங்களில் முளைத்தன, மேலும் இந்த முயற்சிகளில் சிலவற்றுக்கு சிஐஏ நிதியளித்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இலக்கு என்ன? பிராந்தியத்தை நன்கு புரிந்து கொள்வது, குறிப்பாக பனிப்போர்க் காலத்தின்போது கம்யூனிஸத்தின் பரவலை எதிர்த்துப் போராடும் சூழலில் அதனைப் புரிந்துகொள்வது.

ட்ஸூவின் முயற்சிகள் பிராந்தியத்தைப் படிப்பதையும் தாண்டிச்சென்றன; அவர் அதன் விவரிக்க முடியாத சாரத்தைக் கைப்பற்ற விரும்பினார். 2017 ஆம் ஆண்டில், CDOSEA (தென்கிழக்கு ஆசியாவின் திறனாய்வு அகராதி (Critical Dictionary of Southeast Asia) என்பதன் சுருக்கம்ு) மூலம் அவர் இதனை அடைந்தார். CDOSEA என்பது முதலில் தென்கிழக்கு ஆசியாவின் வரலாறுகள் தொடர்பான காணொளித் துண்டுகள், ஒலிகள் மற்றும் வசனங்களின் தரவுத்தளமாகும், ஆனால் இந்தத் தரவுத்தளச் சேகரிப்பிலிருந்து சீரற்ற தொடர்களைத் தொடர்ந்து உருவாக்கும் ஒரு படிமுறைத்தீர்வுடன் இது நிரலாக்கம் செய்யப்பட்டுள்ளது. இஃது இடைவிடாத, எப்போதும் மாறிவரும் காட்சிகள் மற்றும் ஒலிகளின் படத்திரையை உருவாக்குகிறது - அந்த வகையில் அது நிலையானது போன்றில்லாத ஓர் உயிருள்ள, சுவாசம் கொண்ட ஒன்று. ஒவ்வொரு முறையும் CDOSEA ஒரு புதிய பதிப்பை அல்லது வரிசையை உருவாக்கும் போது, அது ஒரு தனிப்பதிப்பு, எல்லையற்ற வாய்ப்புக்கூறுகளிலிருந்து ஒரு பொருள்விளக்கம். CDOSEA ஒரு உருச்சான்றுவகையாகச் செயல்படுகிறது, அதில் ஒரு பிராந்தியத்தின் நீர்மநிலைகொண்ட சிக்கலான தன்மையை மிகவும் மாறுபட்டதாகவும், எந்த ஓர் கதையையும் கொண்டிருக்க முடியாத அளவிற்கு மாறும் தன்மையுடனும் ஓர் ஆடிவில்லையின் மூலம் நாம் காண முடியும்.

எனவே, ட்ஸூவின் படைப்பைப் ் பற்றி நாம் பேசும்போது, தென்கிழக்கு ஆசியா போன்ற வேறுபட்ட பிராந்தியத்தின் புரிந்துகொள்ள முடியாத நுணுக்கங்களைச் சரிசெய்ய முற்படும் ஒரு ஆக்கப்பூர்வமான செயல்பாட்டில் நாம் உண்மையில் மூழ்கி இருக்கிறோம். சில விஷயங்களை, நாம் எவ்வளவு கடினமாக முயற்சி செய்தாலும், முழுவதுமாகக் கைப்பற்ற முடியாது மற்றும் அவை முடிவில்லாமல் ஆராயப்பட முடியும் என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது.

## 2 CDOSEA: சதுர அடுக்கு (நிலப்பரப்பு)

2019
லெண்டிகுலர் அச்சிடல், எல்இடி விளக்குப் பெட்டி, உலோகச் சட்டகம்
180 × 180 × 10 செ.மீ

பியர் லோரினெட் (Pierre Lorinet) சேகரிப்பிலிருந்து கடனாகப் பெற்றது.

## CDOSEA: சதுர அடுக்கு (நிலப்பரப்பு)

2019
லெண்டிகுலர் அச்சிடல், எல்இடி விளக்குப் பெட்டி, உலோகச் சட்டகம்
180 × 180 × 10 செ.மீ

ஓவியரின் தொகுப்பு

## 3 எஃப் எனில் மடிக்கவும் (F for Fold)

2021
காகிதத்தில் நிற அச்சிடல்
அமைப்புக்கூறுகள் மாறியானவை; 12.4 × 18 × 5 செமீ (மூடப்பட்ட நிலை)

ஓவியரின் தொகுப்பு
இந்தோனேசியாவின் Goethe-Institut-ஆல் பணியமர்த்தப்பட்டது.

## 4 அறியாத மேகம்

2011
காணொளி, புகை இயந்திரம், விளக்குகள், காட்சிக் கட்டுப்பாட்டு அமைப்பு
காணொளி: ஒற்றை-வழி உயர்தெளிவு படமெறிதல், 16:9, நிறம் மற்றும் 13-வழி ஒலி, 28 நிமிடம்

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

2011 இல், ட்ஸூ ‘அறியாத மேகம்’ என்ற இந்த நிறுவலின் மூலம் வெனிஸ் ஈராண்டுக் கண்காட்சியில் சிங்கப்பூர் சார்பாகப் பங்கேற்றார், அதில், மேகத்தின் எப்போதும் மாறிவரும் மையக்கருத்தை அவர் கலை வரலாற்றின் மூலம் ஆராய்கிறார், எப்படியோ ஒரு பேரண்டத் திருப்பத்தில், வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் (HDB) அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தனிமையில் வாழும் பலதரப்பட்ட கதைப்பாத்திரங்களை இணைக்கிறார்.

இத்தாலிய மறுமலர்ச்சி ஓவியத்தில், மேகம் பொதுவாக வரைதுணியில் நிறப்பூச்சுகளைப் பயன்படுத்துவதன் மூலம் வரையப்படுகிறது, இது பெரும்பாலும் பரவசத்தையும் தெய்வீகத்தையும் குறிக்கிறது. இதற்கு நேர்மாறாக, பாரம்பரியச் சீன இயற்கைக்காட்சி ஓவியம் மேகத்தின் சாரத்தை நிறப்பூச்சு பூசாமல், வரைதுணியின் மேற்பரப்பைத் தொடாமல் விட்டுவிடுவதன் மூலம் வரையப்பட்டு, அதன் உருவிலிப் பண்பை எடுத்துக்காட்டுகிறது. இச்சீன ஓவியர்களில் பலர், “வெறுமை” அல்லது “அசல் வெறுமை” இல்லாத ஒன்று அன்று; மாறாக, அது முழுமையான, உயிர்ப்புடன் கூடிய துடிப்பான வெளி என்ற தாவோயிசக் கருத்தியலால் உந்தப்பட்டவர்கள்.

ட்ஸூவின் ஓவியத்தில் உள்ள வெற்று அல்லது வெற்றுத் திரைகள் நிறைய பேசுவதை நான் எப்போதும் உணர்ந்திருக்கிறேன். அறியா மேகத்தில் மட்டுமன்று, ‘ஹோட்டல் அபோரியா’வில் முகங்கள் மறைந்திருக்கும், மற்றும் CDOSEA-வில் (அருகிலுள்ள அறையில் உள்ளது) கூட அதன் பின்னால் ஒளிரும் LED விளக்குகள் காரணமாக அவ்வப்போது திரை வெறுமையாகத் தோன்றும்.

முன்னுரை என்னவென்றால், ஏதோ ஒன்று காணப்படவில்லை என்பதால் அது இல்லை என்று பொருளன்று. ட்ஸூ வழங்கும் ஒவ்வொரு வெற்றுத் திரையிலும், வெற்றிடத்தை நிரப்ப நம் கற்பனையைத் தூண்டி, முடிவில்லா வாய்ப்புகளை அவர் நமக்கு வழங்குவதாக உணர்கிறேன். கணிக்க முடியாத எதிர்காலத்திற்கான நுழைவாயிலாக வெறுமையை நாம் கற்பனை செய்ய முடியுமா? அறியாத மேகத்திலுள்ள தொடக்கப் படம் ஒரு வெற்றுத் திரையாகும், அதைத் தொடர்ந்து ஒரு கதைப்பாத்திரம் அதனை வெறித்துப் பார்க்கிறது. களியமாக, இந்தக் கதைப்பாத்திரம் பார்வையாளரான உங்களுக்கு ஒரு நிலைப்பாடாக இருக்கலாம்.

ஒரு வீவக கட்டடத்தில் அதன் இடிப்புக்கு முன்னதாக அமைக்கப்பட்ட, காலியான பொது வீடுகள் தனிமைப்படுத்தப்பட்ட கதைபாத்திரங்களுக்கு மேடைகளாக செயல்படுகின்றன, அவர்கள் மேகங்களுக்காகப் பெரிதும் புகழ்பெற்ற கலைஞர்களை ஒத்திருக்கின்றனர்: மேகங்களைத் தெய்வீக நெருக்கத்திற்கான வழியாகக் கண்ட இத்தாலிய மறுமலர்ச்சி ஓவியத்தை சேர்ந்த கொரெஜியோ; மேகங்கள் நிறைந்த வானங்களுக்குப் பெயர் பெற்ற அடிமன வெளிப்பாட்டியல் ஓவியர் ரெனே மாக்ரிட், மற்றும் பரந்த அண்டவெளியில் நமது விரைவான இருப்பைக் குறிக்கிற மேகங்களால் மூடப்பட்ட மலைகளுக்காகக் கொண்டாடப்பட்ட சீன மை ஓவியர் மி ஃபூ.

மேகம், எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் அதன் வடிவத்தின் மூலம் இயல்பென்பது எப்போதுமே தோன்றுவது போல் இல்லை என்பதை நுட்பமாக நமக்கு நினைவூட்டுகிறது. இந்த விரைவான உலகில், வெறும் வெறுமை, நிறம் பூசப்படாத மேற்பரப்பின் மறைந்திருக்கும் திறன், நிலப்பரப்பு முழுவதும் மேகங்களின் அமைதியான சறுக்கல் ஆகியவற்றை வேறுபடுத்திப் பார்ப்பது கடினமாகிறது. அறியாத மேகம், பார்வையாளராகிய உங்களுடன் கனவு போன்ற மூடுபனியில் மூழ்கி முடிகிறது.

## 5 டி என்றால் நேரம்

2023–நடந்துகொண்டிருக்கிறது
காணொளி, voile திரை, தளர் நெய்வுத்திரைச் சுவர்கள், இணைய இணைப்பு, நிகழ்நேரப் படிமுறைத்தீர்வுப் படத்தொகுப்பு மற்றும் கலந்தாக்கல் அமைப்பு
காணொளி: இரண்டு-வழி ஒத்திசைக்கப்பட்ட உயர்தெளிவுக் காணொளி, 16:9 வடிவம், நிறம் மற்றும் எட்டு வழி ஒலி, தோராயமாக 60 நிமிடம்

டோக்கியோவின் சமகாலக்T கலை அரும்பொருளகம் மற்றும் ஷார்ஜா கலை அறக்கட்டளையுடன் கூட்டு சேர்ந்து, சிங்கப்பூர் கலை அரும்பொருளகமும் ஆர்ட் சோன்ஜே மையமும் M+ உடன் இணைந்து பணியமர்த்தியது.

## 6 டி என்றால் நேரம்: நேரத் துண்டுகள்

2023–நடந்துகொண்டிருக்கிறது
39 தட்டைத் திரைகள் (பல்வேறு பரிமாணங்கள்), செயலிகள் மற்றும் காணொளிகள், பல்வேறு கால அளவுகள் (30 வினாடிகள் முதல் முடிவிலி வரை)

டோக்கியோவின் சமகாலக் கலை அரும்பொருளகம் மற்றும் ஷார்ஜா கலை அறக்கட்டளையுடன் கூட்டு சேர்ந்து, சிங்கப்பூர் கலை அரும்பொருளகமும் ஆர்ட் சோன்ஜே மையமும் M+ உடன் இணைந்து பணியமர்த்தியது.

“நேரம் என் படைப்புகளில் முக்கியக் கதாநாயகன்” என்று ட்ஸூ ஒருமுறை குறிப்பிட்டார். அவரைப் பொறுத்தவரை, இது கடிகாரங்களின் ‘டிக் டிக்’ ஒலியெழுப்பலோ அல்லது நாள்கள் கடந்து செல்வதைப் பற்றியதோ அன்று. அவர் அணு மட்டத்தில் நேரத்தைப் பற்றிய கருத்தாக்கத்தில் ஆழமாக மூழ்கி, அதன் பிடிபடாத இயல்பைச் சிந்தித்து, அதன் பரந்த தன்மையை அண்ட அளவில் பெரிதாக்குகிறார். “நேரம் என்றால் என்ன?” என்று அவர் ஆழ்ந்து சிந்திக்கிறார். நேரம் பறக்கிறது அல்லது நேரம் ஓடுகிறது என நாம் அதை உருவகங்கள் மூலம் மட்டுமே விவரிக்க முடியும். நேரம் ஒரு நதி என்றால் அதன் கரைகள்தாம் என்ன? ஒரே ஒரு நேரம் மட்டுமே உள்ளதா? மேலும், அப்படியானால், அது மற்றக் கடிகாரங்களைக் கட்டுப்படுத்தும் தலைமைக் கடிகாரமா? அல்லது வெவ்வேறு நேரங்கள் ஒவ்வொன்றும் அதன் சொந்த இறையாண்மையுடன் உள்ளனவா? இந்தக் கண்காட்சியைக் கூட்டியபோது, நேரத்தின் பல்வேறு வெளிப்பாடுகள் ஒன்றாக இருக்க முடியுமா மற்றும் ஒன்றாக உணர்ந்தறியப்பட முடியுமா என்று நாங்கள் சிந்தித்தோம்.

டி என்றால் நேரம் என்பது நேரம் பற்றிய ட்ஸூவின் குறிப்புகள் மற்றும் ஊகங்களின் தொகுப்பாகும். இந்த வேலை, நேரத்தின் குறியீடுகள் மற்றும் கருத்துகள் முதல் ஆசியா மற்றும் மேற்குலக நாடுகளில் உள்ள நேரத்தைக் கடைப்பிடிக்கும் மரபுகளின் வரலாறுகள் வரை பல்வேறு கருப்பொருள்களை உள்ளடக்கியது, ட்ஸூவின் நண்பரும் ஒத்துழைப்பாளருமான அராய் டோமோயுகியின் குழந்தைப் பருவப் புகைப்படங்கள் மற்றும் வீட்டுத் திரைப்படங்கள் மற்றும் திரு பி.கே. சானுடன் விக்டோரியா திரையரங்கின் கடிகாரக் கோபுரத்திற்குச் சென்றது போன்ற நெருக்கமான நிகழ்வுகளும் இதில் அடங்கும். 79 வயதில் திரு சான், ட்ஸூவின் படப்பிடிப்பகம் (ஸ்டுடியோ) இருக்கும் கட்டடத்தின் மேலாளராக மட்டுமல்லாமல், முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக திரையரங்கத்தின் கடிகாரத்தின் பராமரிப்பாளராகவும் இருந்தார்.

இந்தக் குறிப்புகள் 2-பரிமாண இயங்குபடம் மூலம் மீண்டும் இயங்க வைக்கப்பட்டு, பின்னர் ஒரு படிமுறைத்தீர்வு அமைப்பில் உள்ளீடு செய்யப்படுகின்றன, அவ்வமைப்பு அவற்றை 42 அத்தியாயங்களைக் கொண்ட “திரைப்படமாக” மாற்றுகிறது. ஒவ்வொரு சீரற்ற மாற்றி மாற்றிக் கலத்தலிலும் படவரிசையும் உள்ளடக்கமும் மாறுபடும், இருப்பினும் ஒவ்வொரு மீளியக்கலும் ஒரு கொரிய-ஜப்பானிய ‘ஃப்ரீ-ஜாஸ் சாக்ஸபோன்’ இசைக்கலைஞர் சூன் கிம் என்பவரால் 60 நிமிட மேம்படுத்தப்பட்ட தனிப்பாடல் பின்னணி இசைத்துக் காண்பிக்கப்படுகிறது. மாற்றங்கள் இருந்தபோதிலும், ஒவ்வொரு சுழற்சியும் மீளியக்கல் மற்றும் வேறுபாட்டின் கூறுகளைத் தக்கவைக்கிறது. ‘டி என்றால் நேரம்’ 39 நேரத்துண்டுகளைக் கொண்டுள்ளது, ஒவ்வொன்றும் நேரத்தின் சின்னங்களாகச் செயல்படுகின்றன. இவை 15 வினாடிகளின் குறுகிய காணொளிச் சுழல்கள் முதல் 24 மணிநேரம் முதல் 165.8 பூமி ஆண்டுகள் வரை (நெப்டியூனில் ஒரு வருடம்) சுழற்சிகளில் செயல்படும் செயலிகள் வரை இருக்கும்; சில நிகழ் நேரத்திலும் மாறுபடும். மொத்தத்தில், ‘டி என்றால் நேரம்’ மற்றும் நேரத்துண்டுகள் ஆகியவை நிகழ்நேரத்தில் நேரம் பற்றிய புதிய கதைகள், ஊகங்கள் மற்றும் மாயத்தோற்றங்களைத் தொடர்ந்து உருவாக்கும் வருங்கால இயந்திரத்திற்கான ட்ஸூவின் மாதிரியைக் குறிக்கின்றன.

## 7 ஹோ ட்ஸூ நியென்

பெயர்
2015–2017
காணொளி, 16 புத்தகங்கள்
காணொளி: ஒற்றை-வழி உயர்தெளிவு படமெறிதல், 16:9 வடிவம், நிறம் மற்றும் ஆறு-வழி ஒலி, 16 நிமிடம் 51 நொடி (ஆங்கிலம்); 16 நிமிடம் 52 நொடி (சீனம்)

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

### பெயரிலி
2015
காணொளி
காணொளி: ஒத்திசைக்கப்பட்ட இரட்டை-வழி உயர்தெளிவு படமெறிதல், 16:9 வடிவம், நிறம் மற்றும் ஆறு-வழி ஒலி, 21 நிமிடம் 15 நொடி

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

2015 ஆம் ஆண்டில், ட்ஸூ ‘பெயர்’ மற்றும் ‘பெயரிலி’ என்ற தலைப்புகளில் இரண்டு காணொளிப் படைப்புகளை உருவாக்கினார், இஃது அவர் நீண்டகாலமாகச் செய்துகொண்டிருக்கும் தென்கிழக்கு ஆசியாவின் திறனாய்வு அகராதியிலிருந்து வெளிவந்தது. தென்கிழக்கு ஆசியாவின் பன்மடங்கு உண்மைகளைப் பற்றி சிந்திக்க ஆங்கில எழுத்துக்களை ஒரு பகுப்பியாக அகராதி பயன்படுத்துகிறது.

பெயர் ஜி என்ற ஆங்கில எழுத்தில் இருந்து வந்தது: ஜி எனில் “Ghostwriter” மற்றும் “Gene Z. Hanrahan”, ஜீன் இசட். ஹன்ரஹான் மலாயாவில் கம்யூனிஸ்ட் போராட்டம், 50 பெரும் கிழக்கத்தியக் கதைகள் மற்றும் கடை நடைமுறையில் முன்-பணிவிடைப் பாடநெறி உட்பட பல புத்தகங்களின் ஆசிரியர் மற்றும் பதிப்பாசிரியர் ஆவார். ஒரு காலத்தில் ஹன்ரஹான் ஓர் உண்மையான ஆள் அல்லர், ஆனால் சிஐஏ-விற்கான முன்களத்தில் இருந்தவர் என்ற ஊகம் இருந்தது. பல ஆண்டுகளாக, ஹன்ரஹானின் அறியப்பட்ட அனைத்துப் புத்தகங்களையும் இணையவழிப் புத்தக விற்பனையாளர்களிடமிருந்து ட்ஸூ வாங்கியுள்ளார்.

ஹன்ரஹான் பல அடையாளங்களுக்கான மாற்றுப்பெயராக இருப்பதன் மூலம் இந்தப் பெயர் ஈர்க்கப்பட்டுள்ளது. என்னைப் பொறுத்தவரை, அவர் தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசத்தின் ஒடுக்கப்பட்ட வரலாறுகளுக்கு ஒரு வழித்தடமாக இருக்கிறார், அதே நேரத்தில் இந்தச் சிக்கலான விஷயத்தை பல கோணங்களில் அணுகுவதற்கு ட்ஸூவுக்கு ஒரு பலதுறைக் கலமாகவும் உள்ளார்.

உண்மையில் கட்டாயம் என்னவெனில், பெயரின் இரண்டு பதிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. முதலில் ஹன்ரஹான் என்பது ஒரு புனைப்பெயர், கற்பனையான அடையாளம் என்று ஆங்கிலக் குரலுரை குறிப்பிடுகிறது. இரண்டாவதாக, சீனக் குரலுரை அதற்கு நேர்மாறாக  ஹன்ரஹான் உண்மையில் ஓர் உண்மையான தனிநபர் என்று குறிப்பிடுகிறது.

ஒன்றாகப் பார்க்கும்போது, இந்தப் பதிப்புகள் தெளிவான பதற்றத்தை உருவாக்குகின்றன, ஒவ்வொன்றும் மற்றொன்றுக்கு முரண்படுகின்றன. இந்த முரண்பாடான விவரிப்புகளைச் சரிசெய்யும் பொறுப்பு பார்வையாளரிடம் - இந்த இடத்தில் உங்களிடம் - விடப்படுகிறது. இந்த அணுகுமுறை குழந்தைகளுக்கான உடைந்த தொலைபேசி விளையாட்டை எனக்கு நினைவூட்டுகிறது, அவ்விளையாட்டில் ஒரு கதை அதன் அசல் வடிவத்தைக் காக்க எவ்வளவு கடினமாக முயற்சித்தாலும், ஒவ்வொரு சொல்லிலும் மாற்றப்படுகிறது.

**

எல் என்ற ஆங்கில எழுத்திலிருந்து பெயரிலி உருவானது: எல் என்றால் “லாய் டெக்”.

1939 முதல் 1947 வரை மலேயக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவியேற்ற லாய் டெக், மர்மத்தினுள் மறைக்கப்பட்ட ஒரு புதிரான நபராகவே இருக்கிறார். 30க்கும் மேற்பட்ட மாற்றுப்பெயர்களால் அறியப்பட்ட அவரது உண்மையான அடையாளம் இன்னும் அறியப்படவில்லை. வியட்நாமில் பிறந்த அவர், 1930களில் சிங்கப்பூர் வந்தடைந்தார் மற்றும் கட்சியின் தலைவராக விரைவாக உயர்ந்தார். பிரஞ்சு, ஆங்கிலேயர்களுக்கு இரகசியமாக வேலை செய்த அவர் மூன்று முதலாளிகளுக்கு முகவராக இருந்தார் என்பது இன்று அறியப்படுகிறது

புகழ்பெற்ற நடிகர் டோனி லியுங் சியு-வாய் (Tony Leung Chiu-wai) இடம்பெறும் ஹாங்காங் சினிமாவின் மறுவடிவமைக்கப்பட்ட காணொளித் துண்டுகளால் உருவாக்கப்பட்ட ‘பெயரிலி’ மூலம் லாய் டெக்கின் கதையை ட்ஸூ முதலில் கூறினார். களிநயமாக, லியுங்கின் புகழ்பெற்ற தொழில்வாழ்வில், அவர் அடிக்கடி இரட்டை முகவராக, தகவல் கொடுப்பவராகவும், துரோகியாகவும் நடித்துள்ளார்.

ஒருவேளை, லாய் டெக்கைச் சுற்றியுள்ள மர்மங்கள் தென்கிழக்கு ஆசியாவின் கொந்தளிப்பான வரலாற்றின் நுண்ணிய வடிவமாகக் காணப்படலாம் - அவர் பணியாற்றிய பல்வேறு முதலாளிகள் பிராந்தியத்தின் மீதான கட்டுப்பாட்டிற்காக போட்டியிடும் வெளிநாட்டுச் சக்திகளாக இருந்தனர். ‘பெயரிலி’யின் ஒவ்வொரு பார்வையிலும், லாய் டெக்கின் கதை மற்றொரு அடுக்கைப் பெறுகிறது, கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும், உண்மையையும் புனைகதையையும் இணைக்கிறது.

துரோகிகளின் பண்புகளில் ஏதோ குறை இருப்பது போலவோ, குணத்தில் ஏதோ குறை இருப்பதைப் போலவோ, தார்மீகக் கண்ணோட்டத்தில் துரோகிகளை மதிப்பிடுவது வழக்கம். அவர்களின் கீழ்ப்படியாமையும் நோக்கத்தின் ஒருமையின்மையும் நம்மை நிலைகுலையச் செய்கின்றன. இருப்பினும், துரோகிகளை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கருத்தில் கொள்வதும், புவிசார் அரசியல் சூழ்ச்சியின் சிக்கலான சக்கரங்களில் சிக்கிய பாத்திரங்களாக அவர்களைப் பார்ப்பதும் மிகவும் களிநயமானது என்று நான் நினைக்கிறேன்,

லியுங்கின் அசல் படங்களைப் பார்த்தவர்களைப் பொறுத்தவரை, உங்கள் நினைவுகள் சந்தேகத்திற்கு இடமின்றி உங்கள் ‘பெயரிலி’ பார்த்தல் அனுபவத்தை தனித்துவமான வழிகளில் வண்ணமயமாக்கும். மீளுருவாக்கம் செய்யப்பட்ட ஒவ்வொரு காணொளித்துண்டுகளும் திரைப்படங்கள் சொல்ல வேண்டிய அசல் கதைகளின் விதையைத் தொடர்ந்து சுமக்கின்றன.

## கண்டுலவல் பற்றிய குறிப்பு:

நீங்கள் தற்போது காட்சிக்கூடம் 2-இல் உள்ளீர்கள், காட்சிக்கூடம் 1-இல் உள்ள கூடவழியின் குறுக்கே, நீங்கள் இரண்டு கலைப்படைப்புகளைக் காண்பீர்கள் - பெயர் மற்றும் பெயரிலி - அவை மலேயக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறுகளை ஆழமாக ஆராயும். அதே காட்சிக்கூடத்தில் ஜப்பானின் போர் முயற்சிகளை ஆராயும் ஹோட்டல் அபோரியாவையும் தவறவிடாதீர்கள்

**1**
**ஹோட்டல் அபோரியா**

**2**
**CDOSEA**

**3**
**எஃப் எனில் மடிக்கவும (F for Fold)**

**4**
**அறியாத மேகம்**

**5**
**டி என்றால் நேரம்**

**6**
**டி என்றால் நேரம்: நேரத் துண்டுகள்**

**7**
**ஹோ ட்ஸூ நியென்**

**8**
**ஒன்று அல்லது பல புலிகள்**



## 8 ஒன்று அல்லது பல புலிகள்

2017
காணொளி, புகைக் கருவி, தானியங்கித் திரை, காட்சிக்கட்டுப்பாட்டு அமைப்பு, அலுமினிய சட்டங்களில் 14 வயாங் குளிட் பொம்மைகள்
காணொளி: இரண்டு-வழி உயர்தெளிவு காணொளிப் படமெறிதல், 16:9 வடிவம், நிறம் மற்றும் 10-வழி ஒலி, 33 நிமிடம் 33 நொடி

சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் சேகரிப்பு

2017 ஆம் ஆண்டில், புதிரான மற்றும் மழுப்பலான மலாயன் புலியைத் தேடி, ஓர் இயல்பைத்தாண்டிய பயணத்தை ட்ஸு தொடங்கினார், அது பல வருடங்களாகத் தயாரிப்பில் இருந்தது.

புதிய சிங்கப்பூரை வடிவமைக்க உதவிய ஐரிஷ் கட்டடக் கலைஞரும் சாலை அளவையாளருமாகிய ஜார்ஜ் ட்ரம்கூல் கோல்மேனுக்கும், மலாயன் புலிக்கும் இடையே ஒரு வழக்கத்தைமீறிய இருவரிடை பாடல் இடம்பெறும் விதமாக இரண்டு எதிரெதிர் திரைகளில் ஒரு நிறுவல் விரிவடைகிறது.

ஏன் கோல்மேன்? ஸ்டாம்ஃபோர்ட் ராஃபிள்ஸ் இந்தத் தீவை பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் வணிகத் துறைமுகமாக மாற்றிய மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, 1822-ல் அவர் சிங்கப்பூர் வந்தடைந்தார். தீவின் முதல் நகர்ப்புற வரைபடத்திற்கு மூளையாக செயல்பட்ட கோல்மேன், ஃபோர்ட் கேனிங் ஹில்லில் உள்ள ராஃபிள்ஸின் சொந்தக் குடியிருப்பு உட்பட பல அடையாளச்சின்னமாக விளங்கும் கட்டடங்களை வடிவமைக்கும் பொறுப்பாளராக இருந்தார். ஆங்கிலேய ராஜாவாக வேண்டும் என்று அடிக்கடி பகல் கனவு கண்ட ராஃபிள்ஸ், மூலோபாய ரீதியாக சிங்கப்பூரின் மலாய் மன்னர்களின் கல்லறைகளுக்கு அருகில், உள்ளூர் அடாப்புக் கூரையுடன் மரத்தில் தனது வீட்டை வடிவமைக்க விரும்பினார். ஒரு காலனித்துவக் கனவு உள்ளூர் வரலாற்றைத் துலக்குகிறது.

கோல்மனுக்கும் மலேயன் புலிக்கும் இடையிலான பாடல் ஒரு காவியக் கவிதையாக விரிவடைகிறது, மலாய் உலகில் மனிதர்களுக்கும் புலிகளுக்கும் இடையேயிருந்த ஆழமான கதையைச் சொல்கிறது - இஃது ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய கதை.  சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா ஆகிய அனைத்தும் சுண்டலாந்து எனப்படும் ஒரே நிலப்பரப்பின் பகுதியாக இருந்த காலத்தில், இங்கு பல இடங்களில் புலிகள் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்த காலம் அது.

மலாய் உலகில், புலிகள் வெறும் வேட்டைவிலங்குகள் அல்ல; அவர்கள் உறவினர்கள். மனிதர்களும் புலிகளும் இரத்தக் உறவுகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று ஒரு பழைய பழமொழி உள்ளது, இது பகிரப்பட்ட மூதாதையர்க் காலத்தில் வேரூன்றிய ஒரு மாயத் தொடர்பு. புலிகள் பெரும்பாலும் மூதாதையரின் ஆவிகளுக்கான ஊடகங்களாக பார்க்கப்படுகின்றன, அதனால் அவை வெறும் விலங்குகள் என்பதை விட அதிகமாக மதிக்கப்படுகின்றன - அவை தென்கிழக்கு ஆசியாவின் ஆன்மீகக் காட்சித்திரையின் ஒரு பகுதியாகும்.

இருப்பினும்கூட, ட்சூ நமக்கு நினைவூட்டுவது போல, இந்த அண்டவியல் ஐரோப்பியக் காலனித்துவக் காற்றால் சீர்குலைந்தது. கோல்மனுக்கும் ஒரு மலாய்ப் புலிக்கும் இடையிலான இந்தக் கனவு போன்ற உரையாடலின் மூலம், வரலாறு, காலனித்துவம், இயற்கை மற்றும் ஆன்மீகம் ஆகியவை எவ்வாறுகுறு க்கிடுகின்றனஎன்பதைக் கேள்வி கேட்க அவர் நம்மை அழைக்கிறார்.

திரைப்படங்களுடன், ஒன்று அல்லது பல புலிகள் நகரும் திரைகள் மற்றும் ஜாவானிய வயாங் குளிட் அல்லது நிழல் பொம்மலாட்டங்களையும் உள்ளடக்கியது, இதனால் நாம் வெறும் காட்சியை விட அதிகமாக அனுபவிக்கிறோம் - பழமையானதும் புத்தம் புதியதுமாகிய இன்றைக்கும் பொருத்தமான ஒரு கதையை உணர்கிறோம், புரிந்துகொள்கிறோம்.



## ஹென்ரிச் லுட்மேன் (1824-1905)

*Unterbrochene Straßenmessung auf Singapore*
**(சிங்கப்பூரில் சாலை அளவிடுதல் குறுக்கிடப்படுதல்)**

c. 1865
மர வேலைப்பாடு, உருவப்படம்
20.8 × 29.4 செ.மீ
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் சேகரிப்பு / சிங்கப்பூர் தேசிய மரபுடைமைக் கழகத்தின் படக்கொடை

1865 ஆம் ஆண்டில் ஜெர்மன் படவரைநர் ஹென்ரிச் லுட்மேன் என்பவரால் உருவாக்கப்பட்ட 'சாலை அளவிடுதல் குறுக்கிடப்படுதல்' என்ற மர வேலைப்பாடுகளை ட்ஸு பார்த்ததில் இருந்து 'ஒன்று அல்லது பல புலிகள்' பிறந்தது. 1835 ஆம் ஆண்டு மலாயாப் புலி தென்பட்டதால் கோல்மனின் சாலை அளவீடு திடீரென நிறுத்தப்பட்டபோது நடந்த ஒரு வேடிக்கையான நிகழ்வை இந்த வேலைப்பாடு சித்தரிக்கிறது. வியப்பாக, இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த குற்றவாளிகள் உள்ளிட்ட எந்த ஒரு மனிதர் மீதும் புலி ஒரு பாதத்தை வைக்கவில்லை, அவர்களை தனது ஆய்வுகளுக்காக கோல்மன் பணியமர்த்தியிருந்தார். மாறாக, அப்புலி படத்தின் மையத்தில் உள்ள ஆய்வுக் கருவியான தியோடோலைட்டுக்கு நேராகச் சென்றது.

இந்நிகழ்வுக்குப் பிறகு, பிரிட்டிஷ் காலனித்துவ அரசாங்கம் மலாயன் புலிக்கு எதிரான போரைத் தொடங்கியது, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிங்கப்பூரில் அவை வேட்டையாடப்பட்டன.

ஆயினும் புலிகளின் இந்த உடலடிப்படையிலான அழிவு அவைகள் அடையாளமாகத் திரும்புவதற்கான களத்தை அமைத்தது. 1941 இல், ஜப்பானிய ஏகாதிபத்திய இராணுவம் சிங்கப்பூர் மீது படையெடுத்தது. பின்வாங்கிய ஆங்கிலேயர்கள், ஜப்பானியப் படைகளின் வேகம், மூர்க்கத்தனம், தந்திரம் மற்றும் இருதரப்புத் தன்மை ஆகியவற்றால் தங்கள் அதிர்ச்சிக்கும் சரணடைதலுக்கும் காரணம் காட்டினர் - ஆங்கிலேயர்கள் ஒரு காலத்தில் மலாயாப் புலிகளுக்கு இந்தக் குணங்கள் இருந்ததாகக் கூறினர். ஜப்பானியப் படைக்குத் தலைமை தாங்கிய ஜெனரல் டோமோயுகி யமாஷிதா, "மலாயாவின் புலி" என்று பரவலாக அறியப்பட்டார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய ஆண்டுகளில், மலாயன் புலி அடையாளமாக மீண்டும் திரும்பும், இந்த முறை மலாயன் கம்யூனிஸ்ட் கட்சியின் கொரில்லாப் படைகளால் உருவானது. இந்தச் சக்திகள் சிங்கப்பூர் மற்றும் மலேசியத் தீபகற்பம் முழுவதும் ஆங்கிலேயர்களை வழக்கத்திற்கு மாறான சீர்குலைக்கும் உத்திகள் மூலம் துன்புறுத்தின. நீங்கள் யாரைக் கேட்கிறீர்கள் என்பதைப் பொறுத்து, 1950களில் இந்த கொந்தளிப்பான காலம் மலேய அவசரநிலையாகவோ ஆங்கிலேயர்-எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராகவோ இருக்கும்.

கண்டுலவல் பற்றிய குறிப்பு: நீங்கள் தற்போது காட்சிக்கூடம் 2-இல் உள்ளீர்கள், காட்சிக்கூடம் 1-இல் உள்ள கூடவழியின் குறுக்கே, நீங்கள் இரண்டு கலைப்படைப்புகளைக் காண்பீர்கள் - பெயர் மற்றும் பெயரிலி - அவை மலேயக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறுகளை ஆழமாக ஆராயும். அதே காட்சிக்கூடத்தில் ஜப்பானின் போர் முயற்சிகளை ஆராயும் ஹோாட்டல் அபோரியாவையும் தவறவிடாதீர்கள்.